மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த scholarship பணத்தைப் பொறுத்த அளவில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு பள்ளிக் கல்வித் துறையிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் கேட்பு கேட்கப்பட்டு நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் கேட்கிற அந்த மனுக்கள் காலதாமதம் ஆகிற நேரத்திலே அப்படிப்பட்ட குறைகள் வருவது சகஜமாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கவலையை நாங்கள் புரிந்துகொண்டு, உடனடியாக அரசாங்கம் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து, விரைவிலே மாணவ, மாணவிகளுக்கு அந்தப் பணம் கிடைக்கக்கூடிய வேலையை நிச்சயமாகச் செய்யும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

26—

தரம் உயர்த்துதல்

***57939-திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான நிபந்தனைகளை அப்பள்ளி நிறைவு செய்யவில்லை. 2 கி.மீ. சுற்றளவில் 3 நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. எனவே, நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இந்தப் பள்ளி தகுதி பெறவில்லை.

2010 நவம்பர் 11]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு மேலும் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருப்பனந்தாள் ஒன்றியம், திருமாந்துறை ஊராட்சி நடுநிலைப் பள்ளி சிற்றிடையான்நல்லூர் கிராமத்தில் உள்ளது. இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குப் பொது மக்கள் பங்களிப்பு ரூபாய் ஒரு இலட்சம் செலுத்தி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. எனவே, திருமாந்துறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பந்துறை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியிலே நான்கு வகுப்பறைக் கட்டடங்கள் இருக்கின்றன. கூடுதலாக இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் அங்கே தேவை என்று நான் அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதுபோன்று அந்த வகுப்பறைக் கட்டடங்களை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எடுத்துக்கொண்டு, கட்டுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திருமாந்துறை நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்திலே 200 பள்ளிகளாவது தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் கோரியிருக்கிறோம். அதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு வந்தவுடன், அவர் கோரியபடி திருமாந்துறை பள்ளியை இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

[2010 நவம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைத்துத் தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கோரிக்கைதான். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குத்தாலம் தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வித் துறைமூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை என்னுடைய கோரிக்கையை ஏற்று செய்திருக்கிறார்கள். அதேபோல், நாகை மாவட்டம், குத்தாலம் வட்டம், வேழமுறிந்தான்பட்டி அரசு நடுநிலைப் பள்ளி, 1985 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளி இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் அதிகம் படிக்கின்ற பள்ளி. உயர்நிலைப் பள்ளியை முடித்தவுடன் 10 கிலோமீட்டர், 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள மயிலாடுதுறை அல்லது பேரளம் போன்ற பகுதிகளுக்குச் சென்று மேல்நிலைக் கல்வியைக் கற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால், பெரும்பாலான பெண்கள் உயர் கல்வி கற்கின்ற நிலை தடைபட்டுப் போகிறது. பொது மக்களுடைய வைப்பு நிதியும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேழமுறிந்தான்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுக்காலத்திலே 540 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் பல பகுதிகளிலே அந்தப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருப்பதை

2010 நவம்பர் 11]

மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் அன்பழகன் அவர்கள் கோருவதுபோல வேழமுறிந்தான்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்து, அதற்குரிய கருத்துருக்களை அவருடைய முயற்சியின்பேரிலே அந்தப் பள்ளியிலிருந்தும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலிருந்தும் பெற்று அரசுக்கு அனுப்புவாரென்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடுத்த ஆண்டு தரம் உயர்த்த இருக்கக்கூடிய பள்ளிகளுடைய பட்டியலிலே அந்தப் பள்ளியினுடைய பெயரையும் இணைத்துக்கொள்வதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் தரம் உயர்த்தித் தருகின்றது. பல பகுதிகளில் அரசு உதவிபெறும் பள்ளிகள், 10, 15 கிலோமீட்டர் தூரத்திற்கு அரசுப் பள்ளிகளே இல்லாமல், அரசு உதவிபெறும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளே இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில், அரசு பல உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தந்தாலும் அரசு உதவிபெறும் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தராமல் இருக்கின்ற காரணத்தினால், 10, 15 கிலோமீட்டர் சுற்றளவிற்குச் சென்று அவர்கள் படிக்க முடியாமல் படிப்பைக்கூட இடைநிறுத்தம் செய்கின்ற நிலை ஏற்படுகின்றது. ஆகவே, வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதுபோன்று, அரசு உதவிபெறும் பள்ளிகளையும் தரம் உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை, பலமுறை தொடர்ச்சியாக இந்த அவையிலே வலியுறுத்தப்பட்டு வரக்கூடிய கோரிக்கையாகும். ஆனால், 1991-க்குப் பிறகு, அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகளைத் தரம் உயர்த்துகிறபோது, அதற்கான மானியம்

வழங்கப்படமாட்டாது. அந்த ஆசிரியர் பணியிடங்களுக்கான சம்பளம் அரசிடமிருந்து வழங்கப்படமாட்டாது என்கின்ற நிபந்தனைகளோடு அந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது. 1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடர்ச்சியாக, அரசினுடைய நிதிநிலையைக் கருத்திலேகொண்டு, அரசு இந்த முடிவினை மேற்கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சிறப்பாகக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, எங்களிடத்திலும் இது குறித்து கலந்துபேசி, இது போன்ற கோரிக்கைகள் பல சிறுபான்மைப் பள்ளிகள், மேலும் மற்ற பள்ளிகளிடமிருந்து தொடர்ந்து அரசுக்கு வந்துகொண்டிருக்கக்கூடிய நிலைமையினையும் அவர்கள் கருத்திலேகொண்டு, இது குறித்து முழுமையானதொரு ஆய்வினை மேற்கொள்ளச் சொல்லி பணித்திருக்கின்றார்கள். நாங்களும் துறையினுடைய சார்பிலே அந்த ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றோம். எனவே, இது குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் வரக்கூடிய காலங்களிலே நிதிநிலைமைக்குட்பட்டு என்ன செய்யலாம் என்பதை கலந்துபேசி முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சிவகாசிக்கு அருகில் இருக்கக்கூடிய பூவனாதபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ஏற்கெனவே அந்தத் துறையின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். பிறகு, அந்தப் பள்ளி தரம் உயர்த்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள சுற்றுப்புற கிராம மக்களின் வாழ்க்கையை மிக நன்கு அறிந்திருப்பவர். ஆகவே, வரக்கூடிய காலத்தில் பூவனாதபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியை நானும் நன்றாக அறிவேன். ஏற்கெனவே சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதுகுறித்து என்னிடத்திலே தெரிவித்திருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். இந்த ஆண்டு அந்தப் பட்டியலிலே, அந்தப் பள்ளியை இணைத்துக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். அந்தப் பள்ளி விடுபட்டிருந்தாலும் வரக்கூடிய ஆண்டுகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், எல்லா இடங்களிலும் செய்யும்போது கண்டிப்பாக விருதுநகர் மாவட்டத்திற்கும் சேர்த்து செய்து கொடுத்து விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

பண்ணை

***122255-திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் மரக்கன்று உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளித்திட விரும்புகிறேன்.

ஆத்தூர் தொகுதியில் மரக்கன்று உற்பத்தி பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

TRUTH ALONE TRIUMPHS